# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார்

வணிக மாத இதழ்

Volume: 14 | Issue : 05 | AUGUST 2025 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE










அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
METRO
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343


GSTIN: 33ALZPD4776G1ZO
மல்லிகை
The Mart
GROCERY / TOYS / STATIONERY / GIFTS
Online Delivery : 9345910000
No. 198-A, South Masi Street, Madurai - 625001.


Ananda Nilayam
Mayflower
The Banquet Hall A/C
Location - Google Map
Marriage Function
Betrothal
Naming Ceremony
Birthday Party
Puberty
Get-to-gether
Hall available for all type of functions
Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001
For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583

# தலைவர் அறிக்கை

அஸ்கிதெங்கோ மொன்னு பொறெ

## நமஸ்கார்...

K.K. திநேஷ், தலைவர்

வெற்றிகரமாக இரண்டாவது முறையாக ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் SCC டிரேட் ஃபேர் 2025 - தொழில் வர்த்தக கண்காட்சி & விற்பனை நடைபெற்று முடிந்தது. மூன்று நாட்கள் பல்வேறு தயாரிப்புகளுடன் 77 ஸ்டால்கள் இடம்பெற்றன.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் நடத்தும் வர்த்தக கண்காட்சி, தமிழக தொழில் முனைவோர்களின் வளர்ச்சிக்காகவும், பொதுமக்கள் தாங்கள் எதிர்பார்க்கும் பொருளை ஒரே இடத்தில் கிடைக்கவும் செய்கிறது.

மூன்று நாட்கள், பொதுமக்கள் ஏராளமானோர் வருகை புரிந்தனர். மேலும், கண்காட்சி அரங்கை அமைத்த நிறுவனத்தார்கள் பலர் முழு திருப்தியை தெரிவித்தது மாபெரும் வெற்றியாக கருதுகிறேன்.

வர்த்தக கண்காட்சி சிறப்பாக நடைபெற உதவிய டைட்டில் ஸ்பான்ஸர் வேல் மருத்துவமனை, விளம்பரம் தந்து உதவிய நிறுவனங்கள், பரிசுப்பொருட்கள் மற்றும் நன்கொடை வழங்கிய நிறுவனத்தார்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த வர்த்தக கண்காட்சியை தலைமையேற்று வெற்றிகரமாக நடத்திச் சென்ற துணைத் தலைவரும், கண்காட்சியின் சேர்மன்-ஆன திரு. K.K. குபேந்திரன் அவர்களை ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வாழ்த்துகிறது. இவருடன் நிர்வாகிகளும் இணைந்து ஆக்கப்பூர்வமாக செயலாற்றினர்.

இதற்குப் பின்னணியில், ஸ்டால் குழு, விளம்பரக்குழு, உணவுக் குழு, பாதுகாப்புக்குழு, பரிசுக்குழு, அரங்க அமைப்புக் குழு, வரவேற்புக்குழு, சான்றிதழ் & விருது வழங்கும் குழு ஆகிய குழுக்களின் இரண்டு மாத செயல்பாடுகள் மிகவும் போற்றத்தக்கது. மேற்கூறிய அனைவருக்கும் முன்னாள் தலைவர்கள் தான் வழிகாட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

கண்காட்சியில், வணிகத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல், கல்லூரி மாணவர்களின் திறனை வெளிக்கொணர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உடல் ஆரோக்கியம் காக்க இலவச மருத்துவ ஆலோசனை அரங்குகள், தனி நபர் மற்றும் தொழிலுக்கு நிதி ஆலோசனை வழங்கும் அரங்குகள், கலாச்சாரத்திற்கு ஜாதக பரிவர்த்தனை போன்ற சேவை சார்ந்த அரங்குகளும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

காவல் துறை, தீயணைப்புத் துறை, மின்சாரத் துறை, ஊடகத்துறை ஆகியோரின் ஒத்துழைப்பிற்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் நன்றி தெரிவிக்கிறது.

அனைவருக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துகள்


SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |

**Advisors**

| | |
|---|---|
| K.K. Surendranath | 98409 88810 |
| T.K.D. Mohan | 98430 52530 |

**Patron Members**

| | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

**29.07.2025** – மதுரை பீபீ குளத்தில் நடைபெற்ற ஜிஎஸ்டி குறைதீர்க்கும் கூட்டத்திற்கு சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு மனு அளித்தனர்.

**08.08.2025** – SCC Trade Fair 2025 - தொழில் வர்த்தக கண்காட்சியின் முதல் நாள் அன்று, மதுரை தெற்கு தொகுதியின் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் அவர்கள் கலந்து கொண்டு வர்த்தக கண்காட்சியை துவக்கி வைத்தார். 42வது வார்டு மதுரை மாமன்ற உறுப்பினர் திரு. செல்வி கார்மேகம் அவர்களும் வழக்கறிஞர் திரு. O.B. திலீபன் சக்கரவர்த்தி அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். ஜெயஸ்ரீ ஸ்பன்பாண்டு நிர்வாக இயக்குநர் திரு. T.T. சேதுராம், குவாலிட்டி நிட் வியர்ஸ் பி.லிட். இணை நிர்வாக இயக்குநர் திரு. K.R. ஸ்ரீதர் ஆகியோர் குத்துவிளக்கை ஏற்றினார்கள்.

**09.08.2025** – இரண்டாம் நாள் தொழில் வர்த்தக கண்காட்சியில், தமிழ்நாடு பா.ஜ.க பொதுச் செயலாளர் திரு. இராம. சீனிவாசன் அவர்கள் கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிட்டார்.

அன்றைய தினம், சன் டிவி (கயல் தொடர்) புகழ் திரு. J.J. ஸ்ரீநிவாசன் அவர்களும், பேராசிரியரும் திரைப்பட நடிகருமான திரு. ஜே.ஆர். ஜவஹர்லால் அவர்களும், விஜய் டிவி (சின்ன மருமகள் தொடர்) புகழ் திருமதி. மகாலட்சுமி அவர்களும் தாமாக ஆர்வத்துடன் வர்த்தக கண்காட்சிக்கு கலந்து கொண்டது மகிழ்ச்சியளிக்கிறது.

**10.08.2025** – அதே போல, நிறைவு விழாவில், JB ஹைட்ராலிக்ஸ் நிர்வாக இயக்குநர் திரு. P.J. பன்சிதர் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. S.S. சரவணன் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். திமுக இளைஞர் அணி உறுப்பினரும் வழக்கறிஞருமான திரு. O.B. திலீபன் சக்கரவர்த்தி அவர்களும் நிகழ்வில் பங்கேற்றார்.

சேம்பர் சார்பாக இரண்டாவது முறையாக நடத்தப்பட்ட இந்த மாபெரும் தொழில் வர்த்தக கண்காட்சிக்கு பல்வேறு வகையில் ஆதரவு தந்து மிகப்பெரிய அளவில் வெற்றிபெறச் செய்த அனைவருக்கும் மனமுவந்து நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், இரண்டாவது முறையாக நடத்திய மாபெரும் தொழில் வர்த்தக கண்காட்சி SCC Trade Fair 2025 மிகப்பெரிய வெற்றியடைந்துள்ளதைக் கொண்டாடுகிறது.

அரங்க அமைப்பாளர்கள் பலர் சிறந்த கருத்துக்களை தெரிவித்துள்ளனர். எதிர்வரும் காலங்களில் சேம்பர் நடத்தும் வர்த்தக கண்காட்சியில் மீண்டும் மீண்டும் பங்கேற்க தாமாக முன்வந்துள்ளதே இந்த நிகழ்வின் மாபெரும் வெற்றி.

சேம்பர்–ன் முன்னாள் தலைவர்கள் வழிகாட்டுதலில், நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் வர்த்தக கண்காட்சி குழுவினரின் சீரிய பணியே வெற்றிக்குக் காரணம்.

இந்த மாத லாப் ஸமாச்சார் இதழில், ஸௌ. சேம்பர்–ன் வர்த்தக கண்காட்சி பற்றிய முழுவிபரங்களும் புகைப்படங்களுடன் இடம் பெற்றுள்ளன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தவிற, பல்வேறு தொழில் குறித்த தகவல்களும் இடம்பெற்றுள்ளன. அனைவரும் இந்த மாத இதழை படித்து தங்கள் கருத்துக்களை வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

### திருக்குறள்

**கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற**
**மிக்காருள் மிக்க கொளல்**

**பொருள்:** கற்றவர் சபையில் தாம் கற்றதைச் சபையோர் ஏற்றுக்கொள்ளும்படி கூசாமல் பேசுவதும், தம்மைவிட அதிகமாகக் கற்றவரிடம் (விவாதிக்க நேர்ந்தால்) அவர்கள் அதிகமாகக் கற்றுள்ளதை ஏற்றுக்கொள்வதுமே அவை யஞ்சாமை.

அதிகாரம் 73 | அவை அஞ்சாமை | அங்கவியல்

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544

Exclusive Showroom for U'r Branded Products
IDEAL innerwear · ANAND · Viking · Prithvi INNER WEARS · NAIDU HALL THE FAMILY STORE · JOCKEY INNER WEAR · Poomex · MANGAI NIGHTIES · RASATHE DARLING NIGHTIES · YOKE'S NIGHTY
& All Branded Innerwears for All
Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.
THE BABY SHOP · அலங்கார் தி பேபி ஷாப்
உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402
HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402

# GUEST HOUSE

AVAILABLE ON RENT

@ COURTALLAM

## BeKae Props. P Ltd

No.162, Courtallanather Main Road, Courtallam.
(Opp to Sri Parasakathi College for Women)

DAILY & WEEKLY BASIS | SINGLE / DOUBLE Rooms with Hall

Contact: S.Kumar 98849 19918



BEKAE









SCC டிரேட் ஃபேர் 2025 – தொழில் வர்த்தக கண்காட்சி இரண்டாவது முறையாக கடந்த ஆகஸ்ட் 8, 9 & 10 ஆகிய மூன்று நாட்களுக்கு மதுரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள ராஜ்பாலா அரங்கில் வர்த்தக கண்காட்சி சேர்மன் திரு. கே.கே. குபேந்திரன் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்த கண்காட்சியில், 73 வர்த்தக அரங்குகள், 10 சிறிய ஸ்டால்கள் இடம்பெற்றன. மூன்று நாட்கள் நடைபெற்ற இந்த வர்த்தக கண்காட்சி, தினமும் காலை 10 மணிக்கு துவங்கி இரவு 9 மணி வரை நடைபெற்றது. கண்காட்சிக்கு பொதுமக்கள் நாளொன்றுக்கு சராசரியாக 1500 பேர் என மூன்று நாட்களுக்கு ஏறக்குறைய 4500 பேர் வருகை தந்துள்ளனர்.

இந்த வர்த்தக கண்காட்சி 08.08.2025 அன்று வெள்ளிக் கிழமை துவங்கியது. துவக்க விழாவில் மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் அவர்கள் பங்கேற்று வர்த்தக கண்காட்சியை துவக்கி வைத்தார். சிறப்பு விருந்தினராக 42வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. செல்வி கார்மேகம் அவர்கள் கலந்து கொண்டார். ஜெயஸ்ரீ ஸ்பன்பாண்டு நிர்வாக இயக்குநர் திரு. T.T. சேதுராம், குவாலிட்டி நிட் வியர்ஸ் பி.லிட். இணை நிர்வாக இயக்குநர் திரு. K.R. ஸ்ரீதர் ஆகியோர் குத்துவிளக்கை ஏற்றினார்கள்.

இரண்டாம் நாள் தொழில் வர்த்தக கண்காட்சியில், தமிழ்நாடு பா.ஜ.க. பொதுச் செயலாளர் திரு. இராம ஸ்ரீநிவாசன் அவர்கள் கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிட்டார்.

அன்றைய தினம், சன் டிவி (கயல் தொடர்) புகழ் திரு. J.J. ஸ்ரீநிவாசன் அவர்களும், பேராசிரியரும் திரைப்பட நடிகருமான திரு. ஜே.ஆர். ஜவஹர்லால் அவர்களும், விஜய் டிவி (சின்ன மருமகள் தொடர்) புகழ் திருமதி. மகாலட்சுமி அவர்களும் ஆர்வத்துடன் வர்த்தக கண்காட்சிக்கு கலந்து கொண்டது சிறப்பு.

அதே போல, நிறைவு விழாவில், JB ஹைட்ராலிக்ஸ் நிர்வாக இயக்குநர் திரு. P.J. பன்சிதர் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. S.S. சரவணன் அவர்கள் கௌரவ விருந்தினராகவும், திமுக இளைஞர் அணி உறுப்பினரும் வழக்கறிஞருமான திரு. O.B. திலீபன் சக்கரவர்த்தி அவர்கள் சிறப்பு அழைப்பாளராகவும் பங்கேற்றனர்.

இந்த வர்த்தக கண்காட்சியில், வீட்டு உபயோகப்பொருட்கள், ஆடை மற்றும் அலங்காரப்பொருட்கள், பூஜை பொருட்கள், கட்டுமானம் மற்றும் ரியல் எஸ்டேட், மின்னணு சாதனப் பொருட்கள், ஆபரணப் பொருட்கள், கணினி தொழில்நுட்ப சேவைகள், அலுவலகத் தேவைகள் போன்ற பற்பல வர்த்தக அரங்குகள் இடம்பெற்றன.

தவிர, வேல் மருத்துவமனையின் இலவச மருத்துவ முகாம், தொழில் முனைவோர்கள், தனிநபர்களுக்கு வங்கிகளின் கடன் ஆலோசனை, கே.எல்.என். கல்லூரி மாணவர்களின் தனித்திறனில் உருவான தயாரிப்புகளை காட்சிபடுத்தல், ஜாதகப் பரிவர்த்தனை போன்ற பல்வேறு சிறப்பு நிகழ்வுகளும் இந்த வர்த்தக கண்காட்சிகயில் இடம்பெற்றன.

கண்காட்சி நடைபெற்ற மூன்று நாட்களிலும், வருகை தந்த பொது மக்களுக்கு ஒவ்வொரு மணி நேரத்திற்கு ஒரு முறை குலுக்கல் பரிசுகள், பம்பர் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த வர்த்தக கண்காட்சி வெற்றி பெற உதவிய பொதுமக்கள், வர்த்தக ஸ்டால்கள், விளம்பரதாரர்கள், நன்கொடையாளர்கள் ஆகியோருக்கும், ஒத்துழைப்பு தந்த காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர், மின்சாரத் துறையினர், ஊடகத் துறையினர் ஆகியோருக்கும் ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

JC கணேசன் மருத்துவமனை
NABH Accredited
அழகர்கோயில் ரோடு, சர்வேயர் காலனி, மதுரை - 7
98421 03579, 98427 03579, 97886 03579
jcganesan@gmail.com , Facebook.com/jcortho

Dr. J.C. GANESAN
MBBS., D.Ortho., DNB Ortho, MNAMS, Mch ortho(UK)

Dr. MALARKODI GANESAN
MBBS., DGO, DNB(org)

சிறப்பு சிகிச்சை முறைகள்

- மூட்டு மாற்று அறுவை சிகிச்சை
- ஆர்த்திராஸ்கோப்பி சிகிச்சை
- சேராத எலும்பை சேர்க்கும் / வளர்க்கும் வளையமுறை இல்லிசாரோவ் சிகிச்சை
- முதுகு, மூட்டு, தோள்பட்டை வலி சிகிச்சை
- குழந்தையின்மை சிகிச்சை
- வலியில்லாப் பிரசவம்
- கர்ப்பப்பை கோளாறுகள்
- லேப்ராஸ்கோப்பி சிகிச்சை

இன்சூரன்ஸ் வசதி
மெடி அசிஸ்ட், ஸ்டார் ஹெல்த், பென்சனர் கவர்ன்மென்ட் எம்பிளாயிஸ், குட் ஹெல்த் வசதிகள்

# SCC TRADE FAIR 2025
## சிறப்பாக நடைபெற பங்களித்த உள்ளங்கள்

**ஸ்பான்ஸர் வழங்கியவர்கள்:**
1. வேல் மருத்துவமனை

**நன்கொடை வழங்கியவர்கள்:**
1. வேல் மருத்துவமனை
2. பானு பிளாஸ்டிக் கன்டைனர்ஸ்

**பப்ளிசிட்டி விளம்பரம் அளித்தவர்கள்:**
1. தாசு மெட்டல்ஸ்
2. அமர் டெக் சேஃப்டி லாக்கர்ஸ்
3. வெங்கட் ஸ்கிரீன்
4. ஜியோ டிஜிட்டல் பிரஸ்
5. பானு ப்ளாஸ்டிக் கன்டைனர்ஸ்
6. சரவணா மருத்துவமனை
7. ஈஸ்வரி கேட்டரிங்
8. பார்கவி ஃபோட்டோ ஸ்டுடியோ
9. திரு. லகுடுவா பாஸ்கர், சார்டர்ட் அக்கவுண்டன்ட்
10. வேல் அக்கவுண்ட்ஸ் – திரு. டி.கே. யாகேஸ்வரன்

**பரிசுப்பொருட்களை அளித்தவர்கள்:**
1. சௌபாக்யாஸ் ஜுவல்லரி
2. விக்னேஷ் கிராஃபிக்ஸ்
3. இ.ஏ.வி.ஆர். & சன்ஸ்
4. மதுரை பன்னையார் கார்டன்ஸ் பி.லிட்.,
5. ஸ்ரீ சனிபகவான் எலக்ட்ரானிக்ஸ்
6. ஜெயலக்ஷ்மி டெக்ஸ் – (கலர்) சரவணன்
7. ஆர்.கே. டெக்ஸ்
8. சௌந்தர்யா டிரேடர்ஸ்
9. செவன்சீ இண்டர்நேஷனல்
10. தாசு மெட்டல்ஸ்
11. அமர் டெக் சேஃப்டி லாக்கர்ஸ்
12. அசோகன் ஃபோட்டோகிராஃபி
13. சாய் பாபா ஏஜென்சி
14. ஐஸ்வர்யா டெக்ஸ்
15. திரு. வி.ஜி. ராம்தாஸ்
16. திரு. என்.ஏ.எஸ். முத்துகுமார சாமி
17. திரு. டி.கே. சிவநாத் பாபு
18. திரு. கே.ஜெ. மாரி வசந்த குமார்
19. திரு. ஆர்.ஆர்.ஆர். சிவக்குமார்
20. திரு. எம்.யூ. சரவணன்

**களப்பணியாற்றியவர்கள்**

| PROMOTION |
|---|
| Mr. S.S. Ramsundar |
| Mr. V.V. Suresh |
| Mr. E.R.K. Vignesh Babu |
| Mr. P.S. Rathnakumar |
| Mr. T.R. Ramesh |

| LUCKY DRAW |
|---|
| Mr. T.K. Sivanath Babu |
| Mr. S.S. Prem Kumar |
| Mr. K.V. Kumaresan |
| Mr. K.S. Sivakumar |
| Mr. T.G. Surajlal |
| Mr. Laguduva Baskar |
| Mr. T.K. Saravana Kumar |

| FOOD |
|---|
| Mr. K.B. Sivaprakash Babu |
| Mr. M.R. Murali |
| Mr. A.S.V. Ganesh |
| Mr. N.P. Saravana Kumar |
| Mr. M.U. Saravanan |

| POWER CONTROL |
|---|
| Dr. A.R. Ganesan |
| Mr. M.K. Yoganathan |
| Mr. M.G. Vijayakumar |

**K.K. Kubendran**
Chairman,
SCC Trade Fair 2025
and
Office Bearers & Past Presidents

| FABRICATION |
|---|
| Mr. N.S. Premkumar |
| Mr. K.K. Sankar |
| Mr. M.K. Yoganathan |
| Mr. M.G. Vijayakumar |
| Mr. R.R.R. Sivakumar |

| RECEPTION / MEMBERSHIP DRIVE |
|---|
| Mr. J.S. Sayee Jeevan |
| Mr. S.S. Prem Kumar |
| Dr. A.R. Ganesan |
| Mr. M.M. Dhanasekaran |
| Mr. N.A.S. Muthu Kumara Samy |
| Mr. K.R. Rajendran |

| MOMENTO |
|---|
| Mr. S.K.B. Chandraprakash |
| Mr. B.V. Kuppuraj |
| Mr. K.K. Sankar |

| SECURITY |
|---|
| Mr. T.K. Yageswaran |
| Mr. S.R. Sundarnath |
| Mr. M.G. Vijayakumar |
| Mr. J.R. Premkumar |

**Mr. T.M. Rubesh Babu**
*Stall Co-ordinator*
**Team Members:**
Mr. T.R. Saravanan
Mr. V.S. Vishnuvardhar
Mr. K.K. Sankar
Mr. J.R. Vijayaragavan
Mr. P.S. Rathnakumar






வர்த்தக கண்காட்சியின் துவக்க விழாவில் தொழிலதிபர் திரு. கே.ஆர். ஸ்ரீதர் அவர்கள் குத்துவிளக்கேற்றுகிறார்




மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் அவர்கள் வர்த்தக கண்காட்சியை துவக்கி வைத்து பேசுகிறார்



சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் வர்த்தக அரங்குகளை பார்வையிடுகிறார்.



தொழிலதிபர் திரு. டி.டி. சேதுராமன் மற்றும் மாமன்ற உறுப்பினர் திரு. செல்வி கார்மேகம் ஆகியோரை முன்னாள் தலைவர்கள் எஸ்.கே.ஆர். ரமேஷ் & குமரன் பி. ஜகுவா ஆகியோர் கௌரவிக்கும் நிகழ்வு



வேல் மருத்துவமனையின் இலவச மருத்துவ ஆலோசனை முகாம்



மருத்துவ பரிசோதனை செய்துகொள்ளும் சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. பூமிநாதன் அவர்கள்



கண்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு குலுக்கல் முறையில் பரிசு வழங்க பதிவு செய்யப்படுகிறது.



குலுக்கலில் வென்றவர்களுக்கு கண்காட்சி தலைவர் திரு. கே.கே. குபேந்திரன் மற்றும் செயற்குழு உறுப்பினர் திரு. டி.கே. சிவநாத் பாபு ஆகியோர் பரிசுகளை வழங்கும் நிகழ்வு.



கண்காட்சியில் கே.எல்.என். கல்லூரி மாணவர்களின் திறனில் உருவான படைப்புகளை பார்வையாளர்களுக்கு விளக்குகிறார்கள்.



வர்த்தக கண்காட்சிக்கு வருகை தந்திருந்த விஜய்-டிவி தொடரின் நடிகை மகாலட்சுமியுடன் பார்வையாளர்கள் எடுத்த புகைப்படம்



சன்-டிவி தொடரின் நடிகர் ஸ்ரீநிவாசன் & திரைப்பட நடிகர் ஜவகர்லால் ஆகியோர் கண்காட்சிக்கு வருகை தந்தனர்.



கண்காட்சியை பார்வையிட்ட தொழிலதிபர் ப்ளாக் ஃபாரஸ்ட் நிறுவனர் திரு. பி. ஆனந்த் உடன் ஸௌ. சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ்


SCC
Trade Fair
2025
M/S. ANBU
71
M/S. SRI DEVI SILKS
72
Sri Devi Silks
&
Neelambari Boutique
CO2 PURUS
M/S. KAYAL AGRO FOODS
KAYAL
COMBO
M/S. T.N.K. ENTERPRISES
EAL ESTATE



நிறைவு விழாவில் கலந்துகொண்ட கௌரவ விருந்தினர் Ex MLA எஸ்.எஸ். சரவணன் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.




கண்காட்சி அரங்குகளை பார்வையிட்ட Ex MLA எஸ்.எஸ். சரவணன் அவர்கள் தம் கரங்களால் விற்பனை செய்கிறார்.



சமூக ஜாதக பரிவர்த்தனை அரங்கில் Ex MLA எஸ்.எஸ். சரவணன் அவர்கள் ஜாதகருடன் உரையாடுகிறார்.



நிறைவு விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட வழக்கறிஞர் திரு. ஓ.பி.திலீபன் சக்கரவர்த்தி அவர்களை சேம்பர் முன்னாள் தலைவர் திரு. கே.கே.ஜி. பிரபாகரன் அவர்கள் கௌரவிக்கிறார்



கே.எல்.என். கல்லூரி மாணவர்களின் தனித்திறனில் உருவான படைப்புகளை பார்வையிடுகிறார் கௌரவ விருந்தினர் திரு. பி.ஜெ.பன்சிதர்



வர்த்தக கண்காட்சி அரங்குகளை கௌரவ விருந்தினர், தொழிலதிபர் திரு. பி.ஜெ. பன்சிதர் அவர்கள் பார்வையிடுகிறார். உடன், கண்காட்சி சேர்மன் திரு. கே.கே. குபேந்திரன்



தமிழ்நாடு பா.ஜ.க, பொதுச் செயலாளர் பேரா. இராம. சீனிவாசன் அவர்களை சேம்பர் தலைவர் திரு. கே.கே. தினேஷ் அவர்கள் வர்த்தக கண்காட்சிக்கு வரவேற்கிறார்.



வர்த்தக கண்காட்சியில் இடம்பெற்ற குடிசைத் தொழில் தயாரிப்புகளை பார்வையிடுகிறார் பேரா. இராம. சீனிவாசன் அவர்கள்




வர்த்தக கண்காட்சில் அரங்கு அமைத்த அனைத்து நிறுவனங்களுக்கும் ஸௌ. சேம்பர் சார்பாக, நினைவு கேடயம் வழங்கும் நிகழ்வு



மாணவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வர முயற்சி மேற்கொண்டதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கே.எல்.என் கல்லூரி சேம்பருக்கு நினைவு கேடயம் வழங்கி கௌரவிக்கிறது.




மூன்று நாள் கண்காட்சியை வெற்றிகரமாக நிறைவு செய்ததற்கு முன்னாள் தலைவர் திரு. இ.ஆர். குமரேசன் அவர்கள் வர்த்தக கண்காட்சி குழுவினரை பாராட்டுகிறார்.




வர்த்தக கண்காட்சிக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும், கண்காட்சிக்கு பார்வையிட வந்த முக்கியப் பிரமுகர்களுக்கு சேம்பர் பொதுச் செயலாளர் திரு. ஏ.பி. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி தெரிவித்து நிறைவு செய்கிறார்.

# கைத்தறி நெசவாளர்களுக்கான சிறப்புத்திட்டம் மற்றும் கைத்தறி குடிசைத் தொழில்துறையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள்

நாடு முழுவதும் தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கைத்தறி நெசவாளர்கள் / பணியாளர்களின் நலன்களுக்கான திட்டம் செயல்படுத்துப்படவுள்ளதாக மத்திய ஜவுளி அமைச்சகம் கூறியுள்ளது.

இதன்படி, ஆண்டுதோறும் ஒரு லட்சத்திற்கும் குறைவான வருவாய் கொண்ட 60 வயதுக்கு மேற்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு மாதந்தோறும் 8000 ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்றும், மத்திய – மாநில அரசுகளின் அங்கீகாரம் பெற்ற / நிதியுதவியுடன் கூடிய ஜவுளித்துறை சார்ந்த கல்வி நிறுவனங்களில் டிப்ளமோ, இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு (இரண்டு குழந்தைகள் வரை) ஆண்டுதோறும் 2 லட்சம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நெசவாளர்களுக்கு குறைந்த செலவில் சமூகப் பாதுகாப்பு வழங்கும் வகையில் இயற்கை அல்லது விபத்து காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் நிரந்தர அல்லது பகுதி அளவிலான உடல் ஊனத்திற்கு காப்பீடு வழங்கும் வகையில் பிரதமரின் ஜீவன் ஜோதி பீமா காப்பீட்டுத் திட்டம் மற்றும் பிரதமரின் சுரக்ஷா பீமா காப்பீட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

கடந்த மூன்று ஆண்டுகளில், பருத்தி நூல், பருத்தி துணி வகைகள், ஆயத்த ஆடைகள், இதர நூல் உட்பட பருத்தி ஏற்றுமதி 35 ஆயிரத்து 642 மில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது என்று வர்த்தக புலனாய்வு மற்றும் புள்ளியியல் துறை தலைமை இயக்குநரகம் வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிக்கிறது.

## கைத்தறி குடிசைத் தொழில்துறையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள்:

நாடு முழுவதும் 31.45 லட்சம் வீடுகளில் / இல்லங்களில் கைத்தறி அலகுகள் செயல்பாட்டில் உள்ளதாக மத்திய ஜவுளி அமைச்சகம் தெரிவித்துள்ளது. 2019-20ம் ஆண்டில் எடுக்கப்பட்ட நான்காவது அகில இந்திய கைத்தறி கணக்கெடுப்பின்படி நாடு முழுவதிலும் 35.22 லட்சம் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் அதுசார்ந்த பணியாளர்கள் உள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

கைத்தறித்துறை அமைப்பு சாரா தொழிலாக உள்ளதால் நெசவாளர்களுக்க நேரடி வேலைவாய்ப்புகளை அரசு வழங்குவதில்லை. கைத்தறி நெசவாளர்கள் திறனுடன் கூடிய, பாரம்பரிய தொழிலை செய்து வருவதன் மூலமாக சுய வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர். எனினும் நாடு முழுவதிலும் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலன்களுக்காகவும், கைத்தறி தொழிலை ஊக்குவிக்கும் வகையிலும் மத்திய ஜவுளி அமைச்சகம் தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மூலப்பொருள் விநியோகத்திட்டம் ஆகியவற்றை செயல்படுத்தி வருகிறது.



இத்திட்டங்களின் கீழ் தகுதி உடைய கைத்தறி முகமைகள் / நெசவாளர்களுக்கு மூலப்பொருட்களை கொள்முதல் செய்வதற்காகவும், கைத்தறி உபகரணங்களுக்குத் தேவையான உதிரி பாகங்களை கொள்முதல் செய்வதற்காகவும் சூரிய மின் உற்பத்திக்கான அலகுகள், கைத்தறி எந்திரங்களை நிறுவுவதற்கான கட்டுமானம், திறன் மேம்பாடு, தயாரிப்பு மற்றும் வடிவமைப்பு மேம்பாடு, தொழில்நுட்பம் மற்றும் பொது உள்கட்டமைப்பு, சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் கைத்தறி நெசவாளர்களுக்கு முத்ரா திட்டத்தின் கீழ் சலுகைகளுடன் கூடிய கடனுதவிகள், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், உள்ளூர் நெசவாளர்களின் சிறப்பான செயல்பாட்டுக்கான விருதுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

மத்திய ஜவுளி அமைச்சகத்தால் செயல்பட்டு வரும் இத்திட்டங்களுக்காக கடந்த 5 ஆண்டுகளில் முறையே 1516 கோடி ரூபாய் மற்றும் 1480.71 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மக்களவையில், மத்திய ஜவுளித்துறை அமைச்சரி திரு. கிரிராஜ் சிங் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்துள்ள பதிலில் இதனைத் தெரிவித்துள்ளார்.

- PIB News



# தொழிற்சாலை, தொழிலாளர்களை பதிவு செய்ய இ.எஸ்.ஐ., அழைப்பு

மத்திய அரசின் இ.எஸ்.ஐ., திட்டத்தில் பதிவு செய்யாத தொழிற்சாலை, தொழிலாளர்களை பதிவு செய்ய சிறப்பு ஊக்குவிப்பு திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் இ.எஸ்.ஐ., சார்பில் ஸ்ப்ரீ-2025 என்ற திட்டம் புதிதாக செயல்படுத்தப்படுகிறது. பதிவு செய்யாத தொழிற்சாலை, நிறுவனங்கள், தகுதியுள்ள பணியாளர்களை இ.எஸ்.ஐ., திட்டத்தில் பதிவு செய்ய ஒரு முறை வழங்கும் சிறப்பு ஊக்குவிப்பு நடவடிக்கையாகும்.

இத்திட்டம் 01.07.2025 முதல் 31.12.2025 வரை நடைமுறையில் இருக்கும். ஒரு நிறுவனத்தில் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றினால் அந்நிறுவனம் இ.எஸ்.ஐ., திட்டத்தில் பதிவு செய்யப்படுவது கட்டாயம். அவ்வாறு பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் தாங்களாக முன்வந்து பதிவு செய்யும் வாய்ப்பை ஸ்ப்ரீ-2025 திட்டம் வழங்குகிறது. இதில் நிரந்தர, தற்காலிக, ஒப்பந்த தொழிலாளர்களும் பதிவு செய்ய வேண்டும்.

இத்திட்டத்தில் பதிவு செய்யும் நிறுவனங்களுக்கு பதிவு செய்த தேதிக்கு முந்தைய காலத்திற்கு எந்தவித ஆய்வு, நிலுவைத் தொகை வசூல், அபராதம் விதிக்கப்படாது.

ஒருமுறை மட்டும் இந்த வாய்ப்பு வழங்கப்படும். இ.எஸ்.ஐ.சி., இணையதளம், ஷ்ரம் சுவிதா போர்டல், எம்.சி.ஏ., போர்டல் ஆகியவற்றில் ஏதவாது ஒன்றில் பதிவு செய்யலாம். பதிவு செய்யும் தேதிக்கு பின்னரே அந்நிறுவனத்திற்கு இ.எஸ்.ஐ., சட்டம் பொருந்தும். அதற்கு முந்தைய காலத்திற்கு எந்த தொகையும் செலுத்த தேவையில்லை.

மதுரை கே.கே. நகர் 2வது தெருவில் மண்டல இ.எஸ்.ஐ., அலுவலகத்தில் இதற்கான சேவை மையம் இயங்குகிறது. அலுவலகத்தை 0452-253 1074 அல்லது இ.எஸ்.ஐ., கிளை அலுவலகங்களில் தொடர்பு கொண்டு மேலும் விவரங்களை அறியலாம் என இணை இயக்குநர் மீனாட்சி சுந்தரம் தெரிவித்துள்ளார்.

- L.V. Jothiprakash
Advocate and Labour Management Consultant
Cell: 98422 64144

# நடுத்தர மக்கள் பலனடையும் வகையில் ஜிஎஸ்டி விகிதங்களை மாற்றியமைக்க பரிசீலனை

நடுத்தர வர்க்கத்தினர் விரைவில் பலனடையும் வகையில் ஜி.எஸ்.டி விகிதங்களை மாற்றியமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.





மத்திய பட்ஜெட் அறிவிப்பில் வருமான வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக, நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரிஜி.எஸ்.டி குறைப்பு மூலம் மற்றொரு நிவாரணத்தை வழங்க மத்திய அரசு தயாராகி வருகிறது.

அதன்படி 12 சதவீத வரி அடுக்கை முற்றிலுமாக நீக்குவது அல்லது தற்போது 12 சதவீத வரி விதிப்புக்கு ஆளாகும் பல பொருட்களை 5 சதவீதத்துக்கு கீழ் மறுவகைப்படுத்துவது குறித்து மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

இந்த மறுசீரமைப்பு நடுத்தர மக்கள் மற்றும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினருக்கு பெரிதும் பலனளிக்கும். குறிப்பாக, பற்பசை, பல்பொடி, குடைகள், தையல் இயந்திரங்கள், பிரஷர் குக்கர்கள், சமையலறை பாத்திரங்கள், அயன்பாக்ஸ், கீசர், சலவை இயந்திரங்கள், சைக்கிள்கள், ரூ. 1000 விலை கொண்ட ஆயத்த ஆடைகள், ரூ. 500 முதல் ரூ. 1000 விலை கொண்ட காலணிகள், எழுதுபொருட்கள், தடுப்பூசிகள், பீங்கான் ஓடுகள் மற்றும் விவசாய கருவிகள் போன்றவற்றின் விலை குறைய வாய்ப்புள்ளது என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்மொழியப்பட்ட இந்த மாற்றங்கள் செயல்படுத்தப்பட்டால், மேற்கூறிய பொருட்களில் பல மலிவு விலையில் கிடைக்கும். எளிமைப்படுத்தப்பட்ட மற்றும் அனைவருக்கும் இணக்கமான ஜிஎஸ்டியை நடைமுறைப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக எடுத்து வருகிறது.



விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!
ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்
விஜயலெட்சுமி DTP & ஸ்கிரீன்
91506-00904, 99940-18805, 78128-19162
கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.
SINCE-1993 31 Years 01-07-1993 2023 SVLS
வெள்ளி விழா கண்ட நிறுவனம்
அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்
தினசரி & கட்டிங் மாத காலண்டர்
12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர்
தமிழ் டைரி ஆங்கில டைரி
30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்
20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை
பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY
விபூதி கவர் 7 DAYS DELIVERY
சாமி படம் வுட்லேமினேசன்
ஸ்கூல் லேபிள்



நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!
Cell : 98421-18873,98428-18873
R.R. பாலகுமார்
R.R. குபேந்திரன்
R.R. பிரேம்குமார்
e.mail : svlsmadurai@gmail.com

# சிறுதொழில் நிறுவனங்களுக்கு கண்காட்சி நிதியுதவி

## உத்யம் பதிவு கட்டாயம்

உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் நடக்கும் கண்காட்சியில் பங்கேற்று, சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்த அமைக்கப்படும் அரங்கிற்கு, தமிழக அரசின் நிதியுதவி பெற, உத்யம் பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் பிரிவில் புதிய தொழில் துவங்க அரசு துறைகளின் அனுமதியை விரைந்து பெற்று தருவது, தயாரிப்புகளின் சந்தைப்படுத்தலுக்கு நிதியுதவி செய்வது உள்ளிட்ட பணிகளை **Fame TN** எனப்படும் அரசு நிறுவனம் மேற்கொள்கிறது.

இந்நிறுவனம் தனது, நிதி ஆதரவு கொள்கை வாயிலாக, நம் நாட்டிலும், வெளிநாடுகளிலும் நடக்கும் வர்த்தக கண்காட்சிகள், நிகழ்வுகளில் உற்பத்தி நிறுவனங்கள் பங்கேற்க, தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவி செய்கிறது.

தற்போது, கண்காட்சியில் பங்கேற்க நிதியுதவி செய்யும் கொள்கையில் மாற்றங்களை செய்து உள்ளது.

இதுகுறித்து, சிறு,குறு, நடுத்தர தொழில் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது;

நாடு முழுவதும் உள்ள சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களை முறைப்படுத்த உத்யம் இணையதளத்தில் பதிவு செய்யுமாறு மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்த பதிவு பெற்ற நிறுவனங்களுக்கு வங்கிகளில் கடன், மானியம் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

எனவே, இனி, கண்காட்சியில் பங்கேற்க **Fame TN** வழங்கும் நிதியுதவியைப் பெற விரும்பும் நிறுவனங்கள், உத்யம் சான்றை கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**உள்நாட்டு கண்காட்சியில் பங்கேற்க**

- ரயில் பயண கட்டணம் 75-100 சதவீதம் திரும்ப வழங்கப்படும்.
- தங்குமிடம் வசதிக்கு ஒரு நாளைக்கு ரூ. 3000
- அரங்கு அமைக்க ரூபாய் லட்சம் முதல் இரண்டு லட்சம்.

**வெளிநாட்டு கண்காட்சியில் பங்கேற்க**

- விமான டிக்கெட் கட்டணம் ரூ. 55,000 முதல் 1,00,000 வரை
- தங்குமிடம் வசதிக்கு ஒரு நாளைக்கு ரூ. 3000 முதல் 6000 வரை
- அரங்கு அமைக்க ரூ. 1.50 லட்சம் முதல் 3 லட்சம் வரை.

# ஜி.எஸ்.டி., குறைதீர் கூட்டம்



மதுரை பீபீகுளத்தில் உள்ள மத்திய ஜிஎஸ்டி ஆணையர் அலுவலகத்தில் கடந்த 29.07.2025 அன்று மத்திய ஜிஎஸ்டி., குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொள்ள சேம்பருக்கு அழைப்பு வந்ததை ஏற்று சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டு, சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களின் சரக்கு மற்றும் சேவை வரி குறைகள் பற்றி மனுவாக அளித்தனர். இந்த கூட்டத்திற்கு ஆணையர் திரு. சோமேஷ் திவாரி அவர்கள் தலைமை தாங்கினார்.

# லாப் ஸமாச்சார் இதழ் வெளியீடு



ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 2025 ஜுலை மாத லாப் ஸமாச்சார் இதழை சிங்கப்பூர் வாழ் திரு. பி.ஜே. சரவணன் அவர்கள் வெளியீடு செய்தார். இந்த நிகழ்வில், பொருளாளர் திரு. ராம்லக்ஷ்மண்ஜீ, இணைச் செயலாளர் திரு. சூரியபிரகாஷ், செயற்குழு உறுப்பினர் திரு. தனசேகரன், துணைத் தலைவர் திரு. குபேந்திரன், இதழ் குழு சேர்மன் திரு. விக்னேஷ் பாபு, பொதுச் செயலாளர் திரு. குமரேஷ் பாபு, செயற்குழு உறுப்பினர் திரு. சாயி ஜீவன் மற்றும் சிறப்பு அழைப்பாளர் ஆகியோர் உடன் இருந்தனர்.



# இந்தியாவில் பெண் தொழில்முனைவோர் உலக சராசரியைவிட மிகவும் குறைவு

கடந்த 2022-ம் ஆண்டில், 186 நாடுகளை உள்ளடக்கிய உலக வங்கியின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, தொழில்முனைவில் பாலின இடைவெளி குறித்து ஒரு ஆய்வு நடத்தப்பட்டது.

அதில், இந்திய பெண்களில் 1 சதவீதத்துக்கும் குறைவானவர்களே தொழில்முனைவோராக உள்ளனர் என்றும் இது உலக சராசரியைவிட குறைவு என்றும் அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதே நேரம் இந்திய ஆண்களில் (15-64வயது) சுமார் 3% பேர் தொழில்முனைவோராக உள்ளனர். இது உலக சராசரியுடன் ஒத்துப்போகிறது என்பதை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

# பரிவர்த்தனை இல்லாத ஜன்தன் கணக்கு மூடலா?

பரிவர்த்தனை இல்லாத பிரதமரின் ஜன்தன் வங்கிக் கணக்குகளை மூடுமாறு வங்கிகளுக்கு எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்று மத்திய நிதி அமைச்சகத்தின் நிதி சேவைகள் துறை தெரிவித்துள்ளது. மேலும் இந்த வங்கிக் கணக்குகள் பெருமளவில் மூடப்பட்டதாக தகவல்கள் எதுவும் துறையிடம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருத்துவத் தகவல்

**கேள்வி:** என் வயது 40. ஆறு மாதங்களுக்கு முன் என் கையை உயர்த்தி கம்பியை பிடித்து பேருந்தில் பயணம் செய்து கொண்டு இருந்தேன். பேருந்து ... போட்டதில் என் தோள மூட்டு பிடித்துக் கொண்டது. அன்று முதல் தோள் மூட்டினில் வலி ஏற்பட்டு உள்ளது. பிஸியோதரபி 2 மாதங்கள் செய்தேன். வலி நீங்கவில்லை. தோள்மூட்டிற்கு MRI எடுத்ததில் Anterior Labral Tear உள்ளதாக கூறியுள்ளார். இதற்கு சிகிச்சை உண்டா? வலி குணமாகுமா?

**பதில்:** Anterior Labral Tear என்பது தோள்மூட்டின் கிண்ணம் பகுதியில் உள்ள விளிம்பின் குருத்தெலும்பில் கிழியல் என்று பொருள். பொதுவாக இது தோள்மூட்டு விலகுபவர்களுக்கு சகஜமாக ஏற்படும் பிரச்சினை. உங்களுக்கு ஏற்பட்ட காயத்தின் தீவிரம் தோள்மூட்டு விலகுவதற்கு இணையானதாகும். இதனால் நீங்கள் 6 மாதங்கள் ஆகியும் வலியுடன் இருக்கிறீர்கள். தோள்மூட்டு நுண்துளை சிகிச்சையில் கிழிந்த குருத்தெழும்பை சீரமைத்தால் (Arthroscopic Shoulder Labral Repair) உங்கள் வலி நீங்கும்.


– மரு. கே.என். சுப்பிரமணியன்,
வேல் மருத்துவமனை &
வேல் சிறப்பு எழும்பியல் மையம்






**துணிப்பையை உபயோகிக்கப் பழகுங்கள்**



# சிறு வணிகர்களுக்கான மின் கட்டண சலுகைகள்

## *தமிழக அரசு அறிவிப்பு*

தமிழகத்தில் அனைத்து வீட்டு மின் இணைப்புகள், குடிசை மற்றும் குறுந்தொழில் நுகர்வோர்கள், விசைத்தறி நுகர்வோர்கள், 50 கிலோ வாட் வரை உள்ள தாழ்வழுத்த தொழிற்சாலைகள் மற்றும் 500 யூனிட் வரை பயன்படுத்தும் சிறு வணிகர்களுக்கு எவ்வித மின்கட்டண உயர்வும் இல்லை. இதன்மூலம் 2.83 கோடி மின் நுகர்வோர்கள் பயனடைவார்கள். மேலும், தற்போது உள்ள அனைத்து இலவச மின்சார சலுகைகளும் தொடரும் என மின்சாரத் துறை அமைச்சர் சிவசங்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அரசின் செய்திக் குறிப்பு: மின்சார வாரியங்களின் நிதி நிலைமை சீராக இருப்பதற்காக அந்தந்த மாநிலங்களின் ஒழுங்குமுறை ஆணையம் அவ்வப்போது மின் கட்டணத்தில் மாற்றம் செய்து வருகிறது. தமிழகத்தை பொறுத்தவரையில் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையம் பல்லாண்டு மின் கடடண உயர்வை அறிவித்து ஆண்டுதோறும் நுகர்வோர் விலைக்குறியீட்டு அடிப்படையில் மின் நுகர்வோர்களுக்கு மின் கட்டணத்தை மாற்றி அமைத்து ஆணை வெளியிடுகிறது.

அதன்படி 2025-26 ஆண்டிற்கு ஜுலை 1-ம் தேதி முதல் வரக்கூடிய மின் கட்டண மாற்றங்களில் பொதுமக்கள் மற்றும் நுகர்வோர் நலன் கருதி தமிழக முதல்வர் ஸ்டாலினின் அறிவுறுத்தலின்படி அனைத்து, 2.42 கோடி வீட்டு நுகர்வோர்களுக்கு ஏற்படக்கூடிய மின் கட்டண மாற்றங்களை அரசே ஏற்று அதற்கான மானியத்தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கும் என்று உத்தரவிட்டதை ஏற்கனவே மின்சாரத் துறை அமைச்சர் சிவசங்கர் சார்பில் அறிக்கையாக வெளியிடப்பட்டது.

மேலும், அனைத்து வீட்டு மின் நுகர்வோர்களுக்கும் 100 யூனிட் வரை விலையில்லா மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும் மற்றும் குடிசை இணைப்புகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்படும். 100 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தும் அனைத்து வீட்டு மின் நுகர்வோர்களுக்கும் உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை, தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ. 374.89 கோடி அரசுக்கு கூடுதல் செலவாகிறது.

வீட்டு மின் நுகர்வோர்களுக்கு, நிலைக்கட்டணம் இரு மாதங்களுக்கு ரூ. 20 முதல் ரூ. 50 வரை செலுத்துவதில் இருந்த முழுவிலக்கு தொடர்ந்து அளிக்கப்படுகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீட்டு மின் நுகர்வோர்களும் பயனடைவார்கள். தற்பொழுது விவசாயம், கைத்தறி, விசைத்தறி, வழிபாட்டுத்தலங்கள் மற்றும் தாழ்வழுத்த தொழிற்சாலை ஆகிய மின் கட்டண பிரிவிற்கு வழங்கப்பட்டு வரும் மின்சார மானியம் தொடர்ந்து வழங்கப்படும்.

**தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மின்கட்டண சலுகைகள்:**

இரு மாதங்களுக்கு 500 யூனிட் வரை பயன்படுத்தும் சிறு வணிக மின் நுகர்வோர்களுக்கு உயர்த்தப்பட்டுள்ள மின் கட்டணத்தை (Energy Charges) தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ. 51.40 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள சுமார் 34 லட்சம் சிறு வணிக மின் நுகர்வோர்கள் பயனடைவார்கள்.

50 கிலோ வாட் வரை ஒப்பந்தப் பளு (Sanctioned Load) கொண்ட தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு (LT (III) B Industries) உயர்த்தப்பட்டுள்ள மின்கட்டணத்தை தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ. 76.35 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 2.81 லட்சம் தாழ்வழுத்த தொழிற்சாலை மின் நுகர்வோர்கள் பயனடைவார்கள்.

குடிசை மற்றும் குறு தொழில்களுக்கு (LT (III) A(1) - Cottage and Micro Industries) உயர்த்தப்பட்ட மின்கட்டணத்தை தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ. 9.56 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 2.70 லட்சம் குடிசை மற்றும் குறு தொழில் மின்நுகர்வோர்கள் பயனடைவார்கள்.

விசைத்தறி நுகர்வோர்களுக்கு 1000 யூனிட் வரை இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும். மேலும் 1001 யூனிட்டுகளுக்கு மேல் உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தை தமிழக அரசே ஏற்று மானியமாக வழங்குவதால், ஆண்டொன்றுக்கு ரூ. 7.64 கோடி அரசிற்கு கூடுதல் செலவாகிறது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 1.65 லட்சம் விசைத்தறி நுகர்வோர்களும் பயனடைவார்கள்.

எனவே 2025-26 ஆம் ஆண்டின் மின் கட்டண உயர்வின் படி தமிழ்நாட்டில் சுமார் 2.83 கோடி மின் நுகர்வோர்களுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லாமல் பயனடைவார்கள். இதனால் தமிழக அரசிற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 519.84 கோடி கூடுதல் செலவாகும். இந்த மானியத் தொகையினை தமிழக அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கும். இது தவிர பெரிய தொழில், பெரிய வணிக நிறுவனங்கள் மற்றும் பிற வகை கட்டண பிரிவுகளுக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ளவாறு 3.16%-க்கு மிகாமல் மின் கட்டணம் உயர்த்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தலைமுறைகள் கடந்தும் நிலைத்து நிற்கும்

# கைத்தறி



### தேசிய கைத்தறி தினம் – ஆகஸ்ட் 7ந் தேதி

ஆதிகாலத்தில், மரத்தின் இலைகள் உடலை மறைப்பதற்காக உபயோகப்பட்டன. நாகரீகம் வளர வளர, நூல் இழைகள் கொண்டு ஆடைகள் நெய்து, பரிணாம வளர்ச்சி அடைந்தது. இதில் சோம்நாத் பகுதியில் வாழ்ந்த நம் முன்னோர்களின் பங்கு அளப்பரியது.

விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயரின் அன்பையும், ஆதரவையும் ஸௌராஷ்ட்ரர்கள் பெறுவதற்கு கைத்தறியில் நிபுணத்துவம் தான் காரணம். அதன்பிறகே, அரசு மரியாதையுடன் அவர்கள் தெற்கு நோக்கி பயணித்தனர் என்பது சரித்திரம்.

சுதந்திரப் போராட்டத்தின் அடையாளமாக திகழ்ந்தது, கதர் ஆடை. மகாத்மா, ராட்டையில் நூல் நூற்பதை ஒரு தவமாக செய்து வந்தார். சுதேசி இயக்கம் தொடங்கிய போது, அன்னிய நாட்டின் துணிகளை புறக்கணித்து, மக்களை, நம் நாட்டின் கைத்தறி ஆடைகளை அணியுமாறு, பணித்தார்கள். விடுதலை வேள்வியில் கைத்தறியும் பங்கு வகித்தது என்பது போற்றத் தகுந்தது ஆகும்.

இதன் நினைவாக, 2015ல் தொடங்கி, ஆண்டுதோறும் தேசிய கைத்தறி தினம் ஆகஸ்ட் 7-ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த நன்நாளில் நெசவாளர்கள் கௌரவித்து, விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. கைத்தறிக்கு அரசாங்கத்தின் அரவணைப்பு இருந்து வருவதற்கு இதுவே ஆதாரம்.

நம் நாட்டில், விவசாயத்திற்கு அடுத்ததாக அதிக வேலை வாய்ப்பு அளிப்பது ஜவுளித்துறை என்பதில் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது. அத்தகைய ஆடை தயாரிப்புத் தொழிலில், கைத்தறிக்கு என ஒரு சிறப்பிடம் எப்போதும் உள்ளது. விஞ்ஞான கண்டுபிடிப்புகளின் தாக்கம், இத்தொழிலை சிறிது தளர்வடையச் செய்திருந்தாலும், நம் கலாச்சாரத்தின் மீது மக்களின் ஈர்ப்பு அதனை தக்கவைத்துக்கொண்டிருக்கிறது எனலாம்.

கைத்தறி, பல குடும்பங்களின் வாழ்வாதாரம் மட்டுமல்ல, இந்தியத் திருநாட்டின் பொருளாதாரத்தின் மூலாதாரம். ஏற்றுமதியில் பிரதான இடம் இதற்கு என்றென்றும் உண்டு. அன்னிய செலாவணி கையிருப்பு, கைமீறி போகாமல் இருக்க, கைத்தறி கைகொடுக்கிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

கைத்தறி ஆடைகள், உடுத்துவதற்கு மட்டுமல்லாமல் பன்முக உபயோகத்திற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. நாட்டின் வணிக கட்டமைப்புக்கு கைத்தறி எப்படி இன்றியமையாததோ, அதேபோல, நவீன வீட்டின் உட்கட்டமைப்பு, இது இன்றி அமையாது.

மேலை நாடுகளின் ஆடை கலாச்சாரம் தறிகெட்டு போய்க்கொண்டிருக்கும் நிலையில், நம் நாட்டின் கைத்தறி ஆடைகளின் மகோன்னதம், போற்றிப் புகழும் வண்ணம் இருப்பது பெருமைக்குரியது.

கைத்தறி ஆடைகளின் தொழில் நுட்பம் மற்றும் வேலைப்பாடு, இவற்றிற்கு ஈடு இணை விசைத்தறியில் உருவாகும் துணிக்குக் கூட கிடையாது என்பது அனுபவக் கூற்று. எனவே தான் கைத்தறிக்கென்று சில சிறப்பு ஏற்பாடுகள், ஒதுக்கீடுகள் என அரசாங்கம் ஆணை பிறப்பித்து இத்துறைக்கு துணை நிற்கிறது.

ஒருசில சாயங்காலங்கள் கடப்பதற்குள் சாயம் போகும் நிலையில் உள்ள துரித உலகத்தின் துணிகளுக்கு நடுவே, ஆடை கிழியும் வரை சாயம் போகாத ஆபூர்வ தாவர சாயம் போடும்முறை கொண்டது கைத்தறி தயாரிப்புகள் என்பது இதன் பிரசித்திபெற்ற தனித்துவம்.

கைத்தறியில் தயாரிக்கப்படும் சுங்குடி சேலைகளின் மாண்பு பற்றி சகோதரர் ஏ.கே. ரமேஷ் அவர்கள் வரலாற்று சிறப்பு மிக்க ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அந்த நூல் கைத்தறியின் அருமை பெருமைகளை விலாவாரியாக விளக்குகிறது. இந்த புத்தகத்தை எல்லோரும் வாசித்து கைத்தறியின் பெருமையை அறியலாமே.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

என்று தெய்வப்புலவர் எழுதிவைத்தார். உடுக்கைக்கு நட்பை உவமை கூறியது, ஆகஸ்ட் 7ந் தேதி, கைத்தறி தினமாகவும், நண்பர்கள் தினமாகவும் ஒரு சேர கொண்டாடப்படுவதின் முதல் குரல் இக்குறள்தான் என்பது மனித இனத்துக்கே பெருமை.

குலம் காக்கும் கைத்தறி வாழ்க வாழ்கவே!... *– வீரஜா*



# தொழிற்சாலை விபரங்கள் புதிய இணையவழியில் பதிவேற்றம்

தொழிற்சாலை விபரங்களை புதிய இணையவழியில் பதிவேற்றம் செய்யுமாறு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை கேட்டுக்கொண்டுள்ளது.

ஏற்கனவே பதிவு பெற்ற தொழிற்சாலைகள் மற்றும் புதிதாக பதிவு செய்யும் தொழிற்சாலைகள் பதிதாக மேம்படுத்தப்பட்ட **https://dish.tn.gov.in** என்ற இணையதளத்தில் தங்களது தொழிற்சாலை விபரங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

தொழிற்சாலை உரிமம், புதுப்பித்தல், வரைபடம் ஒப்புதல், ஆண்டறிக்கைகள், ஒப்பந்த தொழிலாளர் பதிவுச்சான்று, உரிமம் புதுப்பித்தல், வெளிமாநிலத் தொழிலாளர்கள் பதிவுச்சான்று, உரிமம் புதுப்பித்தல், அழுத்தக்கலன் சோதனை சான்று, மருத்துவ பரிசோதனை சான்று போன்ற அனைத்திற்கும் இணையவழியின் வழியாக விண்ணப்பிக்க வேண்டும்.

தொழிற்சாலை உரிமம் புதுப்பித்தல் கட்டணம், ஒப்பந்த தொழிலாளர் பதிவுச்சான்று மற்றும் உரிமம் புதுப்பித்தல் கட்டணம், வெளி மாநிலத்தொழிலாளர்கள் பதிவுச்சான்று மற்றும் உரிமம் புதுப்பித்தல் கட்டணம், அழுத்தக்கலன் சோதனை கட்டணம் ஆகியவற்றை பழைய நடைமுறை இ-செலான் e-chellan முறையில் இருந்து மாற்றம் செய்து இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

தொழிற்சாலை பெயர் மாற்றம், உரிமையாளர் மாற்றம், ஒப்பந்த தொழிலாளர் பதிவுச்சான்று திருத்தம், வெளிமாநிலத் தொழிலாளர்கள் பதிவுச் சான்று திருத்தம் ஆகியவற்றிற்கும் இணையதளம் வாயிலாக அதற்கான கட்டணத்தை ஆதாரங்களுடன் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

தங்களது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு இணையதளம் வாயிலாக அதற்கான ஒப்புதல் அளிக்கப்படும். இதற்காக அலுவலகம் வரவேண்டிய அவசியம் இல்லை.

# Handy Guide to New DISH Portal log in Procedures

### (For Factories Migration)

**Documents and data to be ready before initiating the migration**

| S. No. | Documents | Data |
|---|---|---|
| 1 | Aadhaar ID(jpg or jpeg) | Mail Id (old & New(if to updated)) |
| 2 | Rent/Lease deed (pdf) | Mobile No. (old & New(if to update) |
| 3 | GST Cerificate (pdf) | Occupier address (Present & Permanent) |
| 4 | Partnership Deed (pdf) | DIN No. (If applicable) |
| 5 | ID/address proff (jpg or jpeg) | LIN No. (If applicable) |
| 6 | Pan Card (pdf) | MSME Registration Details |
| 7 | Land Document (pdf) | ESI & EPF No. |
| 8 | List of Directors/partners (pdf) | PAN No. |
| 9 | | NIC Code as per NIC 2008 |

## Migration Flow Chart

Visit **https://dish.tn.gov.in**
↓
All User Login
↓
New User Login
↓
Registration (first name & last name as in aadhar) (email id (you may use new id also) (mobile (you may use new mobile also)
↓
Enter email OTP
↓
Verify OTP
↓
Enter mobile OTP
↓
Verify OTP
↓
Login
↓
Sign in (Enter User Name as mail Id) (Enter Captcha) (Enter Password)
↓
Account setup
↓
Existing Services
↓
Existing Factory
↓
Add email (Pls enter old dish portal email id)
↓
Get OTP
↓
Enter OTP received in mail and verify
↓
Check & edit particulars (for age update,pls re-enter the date of birht)
↓
**Submit for JD approval**



# பயணிகள் ரயில் கட்டணம் உயர்வு

## எத்தனை கி.மீ.,-க்கு எவ்வளவு அதிகரிப்பு?

நாடு முழுவதும் ஜுலை 1 முதல் பயணிகள் ரயில் சேவை அடிப்படை கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. கட்டண சீரமைப்பின் முக்கிய அம்சங்கள்:

புறநகர் ரயில் பயணக் கட்டணங்கள் மற்றும் சீசன் டிக்கெட் கட்டணத்தில் (புறநகர் மற்றும் புறநகர் அல்லாத வழித்தடங்கள்) எந்த மாற்றமும் இல்லை.

சாதாரண ஏசி அல்லாத வகுப்புகளுக்கு (புறநகர் மற்றும் பிற ரயில்கள்); இரண்டாம் வகுப்பு – ஒரு கிலோமீட்டருக்கு அரை பைசா அதிகரிப்பு. (நிபந்தனைக்கு உட்பட்டது)

500 கி.மீ., வரை கட்டண அதிகரிப்பு இல்லை.

501 முதல் 1500 கி.மீ., தூரத்துக்கு ரூ. 5 அதிகரிப்பு

1501 முதல் 2500 கி.மீ., தூரத்துக்கு ரூ. 10 அதிகரிப்பு

2501 முதல் 3000 கி.மீ., தூரத்துக்கு ரூ. 15 அதிகரிப்பு

படுக்கை வசதி வகுப்பு: ஒரு கிலோமீட்டருக்கு 0.5 பைசா அதிகரிப்பு

முதல் வகுப்பு: ஒரு கிலோமீட்டருக்கு 0.5 பைசா அதிகரிப்பு

மெயில்/எக்ஸ்பிரஸ் ரயில்களுக்கு(ஏ/சி அல்லாதவை):

இரண்டாம் வகுப்பு: ஒரு கிலோமீட்டருக்கு 01 பைசா அதிகரிப்பு

படுக்கை வசதி வகுப்பு: ஒரு கிலோமீட்டருக்கு 01 பைச அதிகரிப்பு

முதல் வகுப்பு: ஒரு கிலோமீட்டருக்கு 01 பைசா அதிகரிப்பு

அனைத்து ஏசி வகுப்புகளுக்கும் ஒரு கிலோ மீட்டருக்கு 02 பைசா அதிகரிக்கப்பட்டுள்ளது.

ராஜ்தானி, சதாப்தி, துரந்தோ, வந்தே பாரத், தேஜஸ், ஹம்சஃபர், அம்ரித் பாரத், மகாமனா, கதிமான், அந்தியோதயா, ஜன் சதாப்தி, யுவா எக்ஸ்பிரஸ் உட்பட முதன்மை மற்றும் சிறப்பு ரயில் சேவைகளுக்கான கட்டணம், திருத்தப்பட்ட வகுப்பு வாரியான கட்டண கட்டமைப்பின்படி பொருந்தும். துணை கட்டணங்களில் எந்த மாற்றமும் இல்லை.

முன்பதிவு கட்டணம், அதிவிரைவு ரயில் கூடுதல் கட்டணம் மற்றும் பிற கட்டணங்களில் எந்த மாற்றமும் இல்லை. விதிகளின்படி ஜிஎஸ்டி தொடர்ந்து வசூலிக்கப்படும்.

01.07.2025 அன்று அல்லது அதற்குப் பிறகு முன்பதிவு செய்யப்படும் டிக்கெட்டுகளுக்கு திருத்தப்பட்ட கட்டணங்கள் பொருந்தும். இந்த தேதிக்கு முன் வழங்கப்பட்ட டிக்கெட்டுகளுக்கு எந்த மாற்றமும் இன்றி தற்போதைய கட்டணமே பொருந்தும்.

திருத்தப்பட்ட கட்டணக் கட்டமைப்பு சீராக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்காக அனைத்து மண்டல ரயில்வேக்களுக்கும் ரயில்வே அமைச்சகம் தேவையான வழிமுறைகளை வெளியிட்டுள்ளது. அனைத்து ரயில் நிலையங்களிலும் கட்டண அட்டவணையை புதுப்பிக்க ரயில்வே மண்டல அலுவலகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.









Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009

Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.

Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

**JSW Steel**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

**Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in**

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj**®

RIGID PVC PIPES,FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*



## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

## VIGNESH GRAPHICS

*All Kinds of Printing Solution*



- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

**Head Office :** 79-A, South Marret Street, Madurai - 625 001.

**Branch :** No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

**Branch :** Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards

## உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

**ஆலோசனை பெற அணுகவும்**

**L.N.R. தாமோதரன் - 98431 71477**

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2025-2027
Printed Matter

Date of Posting : 20.08.2025 / BPC MDU
Date of Publication 20th of Every Month

0452 231 2293 / 98409 60846 / 90479 50885

UG CHEMI JAGSAN
U G கெமி ஜாக்சன்


(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)

5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009
E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com

வேல் மருத்துவமனை
வேல் சிறப்பு எலும்பியல் மையம்
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

24hrs Service






சிறப்பம்சங்கள்
- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும்
மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்
- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*




**Official Publication:**
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com